# பாடசாலை உயர்கல்விக்கான வழிகள்

## தம்மை அதிகமாக ஈடுபடுத்துவதுடன், அதிகமான வீட்டுப்பாடங்கள்

கிம்நாசியம் செல்பவர்கள் அல்லது துறைசார் பாடசாலை மாணவர்கள் பாடசாலை செல்ல மிகவிரும்புபவர்கள், அவர்கள் கற்க விரும்புவதுடன் இன்னும் அதிகமாக கட்டாய பாடசாலையுடன் ஒப்பிடும்போது தம்மை மேலும் பாடசாலைக் கல்வியில் ஈடுபடுத்த விரும்புவதுடன், மேலும் கற்றுக்கொள்ள விரும்புகிறார்கள். நாளாந்தம் இரண்டு, சிலவேளைகளில் மூன்று மணித்தியாலங்கள் வீட்டுப்பாடங்களைச் செய்வது அவர்களுக்கு எவ்வித கடினங்களும் இருக்காது. இவ்வாறு ஒரு கிம்நாசியத்தில் அல்லது ஒரு துறைசார் கல்லூரியில் இடம்கிடைப்பதற்கு, நீங்கள் கட்டாய பாடசாலையில் ஒரு திறமையான மாணவனாக அல்லது மாணவியாக இருந்திருத்தல் வேண்டும். நீங்கள் மத்திய பாடசாலைத்தரம் I இல் அதிக பாடங்களில் மேலதிக தராதரங்களுடன் ஆகக் குறைந்தது 4.5- மற்றும் விரிவான வகையில் பாடங்களில் விருப்பம் காட்ட வேண்டும்.

## பாடசாலையில் உயர்கல்வியைக் கற்பதற்கு எவை அவசியம்:

- நீங்கள் தொடர்ந்தும் பாடசாலை செல்ல விரும்புவதுடன் மேலும் அதிகமானவற்றைக் கற்க விரும்புகிறீர்கள்.
- நீங்கள் உங்கள் சம வயதினருடன் நாளாந்தம் தொடர்பைக் கொண்டிருக்க விரும்புகிறீர்கள்.
- நீங்கள் பல வித்தியாசமான விடயங்கள் மற்றும் பாடங்களை விரும்புவதுடன், சம்பந்தப்பட்ட விடயங்களில் அடிப்படை ரீதியாக அறிந்து கொள்ள விரும்புகிறீர்கள் (ஆழமாக).
- நீங்கள், அடுத்துவரும் வருடங்களில் கட்டாய பாடசாலைக்கும் மேலாகச் செயற்படுவதற்கு ஆயத்தமாக உள்ளீர்கள்.
- உங்களுக்கு மத்திய பாடசாலைத் தரம் ஒரு நல்ல அடித்தளத்தை இடுவதால், தொழில் பற்றிய ஒரு தெளிவான குறிக்கோள் உள்ளது.
- நீங்கள் ஏற்கனவே மற்றும் தற்போது பாடசாலையில் சிறந்தவராகவும் மத்திய பாடசாலைத் தரத்தில் மேலதிக திறமைகளுடனும் உயர் மட்டத்தில் உள்ளீர்கள், உங்களுக்கு சராசரியாக சிறந்த புள்ளிகள் உள்ளன.
- உங்கள் ஆசிரியர்/ஆசிரியைகள் நீங்கள் கிம்நாசியம் அல்லது ஒரு துறைசார் கல்லூரிக்கு செல்வதற்குத் தகுதியுடையவர் எனக் கருதுகின்றனர்.

## உதவியாக, தொழில் ஆலோசனை நிலையத்தின் கலந்துரையாடல் மற்றும் பரிசோதனை

இந்த முடிவை எடுப்பதற்கு தொழில் ஆலோசனை நிலையம் உங்களுக்கு உதவிசெய்யும். அவர்கள் உங்களுக்கு உயர்கல்வி கற்பதற்கான பாடசாலையைத் தேடுவதற்கு அல்லது ஒரு இடைத்தீர்வைக் காண்பதற்கு உதவுவார்கள். உங்கள் பிரதேசத்திலுள்ள தொழில் ஆலோசனை நிலையத்தைத் தொடர்பு கொள்ளுங்கள் அல்லது பாடசாலையில் ஒரு தனிப்பட்ட கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள். அங்கு நீங்கள் உங்களது விருப்பங்கள் மற்றும் திறமைகளைத் துல்லியமாக விளக்குவதுடன், விரும்பினால் சோதனைகளையும் செய்து பார்க்க முடியும். நீங்கள் ஆண் அல்லது பெண் தொழில் ஆலோசனையாளருடன் உங்கள் முடிவு குறித்துக் கலந்துரையாடலாம், அதற்குப் பதிலானவற்றை ஆலோசிக்கலாம், அத்துடன் அவர்கள் விண்ணப்பிக்கும் வழிமுறைகளை எடுத்துக் காட்டுவதுடன் அடுத்து என்ன செய்யவேண்டும் என்பதைத் திட்டமிடுவார்கள்.

## பொருத்தமான பாடசாலையைக் கண்டறிதல்

அனைத்து மாநிலங்களிலும் பாடசாலை உயர்கல்விக்காக வித்தியாசமான வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. தகவல் வேளைகள் அல்லது விளக்கம் கொடுப்பதற்காகத் திறந்திருக்கும் ஒரு நாளில் அங்கு சென்று பாடங்கள், அங்குள்ள நிலைமைகள் மற்றும் சக மாணவ மாணவிகள் உங்கள் எண்ணத்திற்கு ஏற்றபடி உள்ளதா என்பதை நீங்கள் கண்டறிந்து கொள்ளலாம்.

உங்கள் மாநில கல்வி- மற்றும் உயர்கல்வித் திணைக்களத்தின் இணையத்தளத்தில் (பார்க்க www.edk.ch/dyn/13446.php) உயர்கல்விக்கான பாடசாலைகளை அநேகமாக „துறைசார் பாடசாலைகள்“ என்ற பெயரில் கொடுக்கப்பட்டுள்ளது.

மத்திய பாடசாலைத்தரம் I இன் பின்னர் பாடசாலைகளில் பின்வரும் உயர்கல்விகளை கற்றுக்கொள்ளலாம்:

### கிம்நாசியம்

கிம்நாசியத்தில் நீங்கள் பல்வேறு கட்டாய அடிப்படைப் பாடத்திட்டங்களைக் கற்கவேண்டும். அத்துடன் ஒரு மேலதிக- மற்றும் ஒரு விசேடமாகக் கற்கும் பாடமும் சேர்ந்திருக்கும். இந்த விசேடமாகக் கற்கும் பாடத்தில் நீங்கள் உங்களது குறிக்கோளை முடிவுசெய்ய வேண்டும், அதாவது நீங்கள் கிம்நாசியத்தில் கற்கும் காலத்தில் மற்றும் அதன்பின் உயர்கல்விக்குச் சென்றால் உங்கள் பிரதான விருப்பத்துறைக்கு ஏற்ற நோக்கத்தை இது கொண்டிருக்க வேண்டும்.

சுவிசில் டொச் பேசும் பகுதியில் வழங்கப்பட்டிருக்கும் பல்வேறு வாய்ப்புகளிலிருந்து நீங்கள் உங்களுக்குப் பொருத்தமான துறையைத் தேர்ந்தெடுங்கள். நீங்கள் கிம்நாசியத்தைத் தேர்வுசெய்யும்போது, பல்கலைக்கழகத்தில் எவ்வித துறைகள் உள்ளன என்பதைக் கவனத்திற் கொள்ளவேண்டும்: நீங்கள் உங்களுக்கு ஒரு பல்கலைக்கழகத் துறையைப் பதிவுசெய்தல் வேண்டும்.

பல்கலைக்கழக வாய்ப்புகள் குறித்து உங்கள் மாநில கல்வி- மற்றும் உயர்கல்வித் திணைக்களத்தின் இணையத்தளத்தில் நீங்கள் அறிந்துகொள்வதுடன் அதற்காக வழங்கப்படும் குறிப்பிட்ட தகவல் வேளைகளில் பங்கெடுத்துக் கொள்ளுங்கள்.

### துறைசார் கல்லூரிகள் (FMS)

துறைசார் கல்லூரிகள் என்பது மிகவும் பயனுள்ள தொழிற்துறைகளைக் கற்பதற்கான திறமையான அடித்தளமாகும், இதன் தொழிற்பகுதிகளாக

- உடல்நலம்/இயற்கை விஞ்ஞானம்
- தொடர்பு/ஊடகம் துறைகள்
- கற்பித்தல் தொழில்நுட்பம்
- சமூக சேவை
- வடிவமைப்பு/கலை
- இசை/நாடகம் /நடனம்

உங்கள் மாநில கல்வி- மற்றும் உயர்கல்வித் திணைக்களத்தின் இணையத்தளத்தில் விசேட தன்மைகள் குறித்து நீங்கள் அறிந்துகொள்வதுடன் அதற்காக வழங்கப்படும் குறிப்பிட்ட தகவல் வேளைகளில் பங்கெடுத்துக் கொள்ளுங்கள்.

### தொழிற்கல்வியுடனான முழுநேரப் பாடசாலைகள்

முக்கியமாக சுவிசில் இத்தாலி- மற்றும் பிரெஞ்சு பேசும் பகுதியில் முழுநேரப் பாடசாலையில் தொழிற்கல்வியைக் கற்க முடியும். டொச் பேசும் பகுதியில் வணிக மற்றும் கணனி அறிவியல் கல்லூரிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

## உயர்கல்வி கற்கும் பாடசாலையில் சேர்வது

உயர்கல்வி கற்கும் பாடசாலைக்கு அனுமதி மாநிலத்திற்கு மாநிலம் வித்தியாசமாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. சேர்ந்து கொள்ளும் முறைகள் குறித்த சரியான தகவல்களை உங்கள் மாநில கல்வி- மற்றும் உயர்கல்வித் திணைக்களத்தின் இணையத்தளத்தில் அல்லது பல்வேறு பாடசாலைகளின் இணையத்தளங்களில் நீங்கள் காணலாம்.

## சொந்தமாகத் தயார்படுத்துவது

அநேக மாணவ/மாணவிகள், துறைசார் பாடசாலைக்குச் செல்லலாம் என்ற கண்ணோட்டம் இருக்கும்போது, மத்திய பாடசாலைத்தர I இன் 2.வது வகுப்பில் இருக்கும்போது தம்மை இதற்காக ஆயத்தப்படுத்திக் கொள்வார்கள். விசேடமாக பிரதான பாடங்களில் திறமையான சித்திபெற்றிப்பது இதற்கு அடிப்படையாகும்.

அங்கு சேர்வதற்கான பரீட்சையில் சித்தி பெறுவதற்காக, முன்னர் இடம்பெற்ற சேர்வதற்கான பரீட்சைத்தாள்களை ஆசிரியர்கள் மாணவ மாணவிகளுக்கு மீள்பயிற்சி செய்துகொள்வார்கள். இவைகளை நீங்கள் உங்கள் மாநிலத்திலுள்ள துறைசார் பாடசாலைகளில் அல்லது கல்வி/உயர்கல்வித் திணைக்களத்தின் இணையத்தளத்தில் காணலாம்.

பல நகரங்களில் மத்தியதரப் பாடசாலைகள், பாடசாலை நேரத்திற்கு வெளியாக இப்படியான அனுமதிக்கான பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் வகுப்புகளை இலவசமாக ஒழுங்கு செய்வார்கள். இதுகுறித்து வகுப்பு ஆசிரியர்கள் விபரம் அறிந்திருப்பார்கள்.

அத்துடன் அநேக தனிப்பட்ட வியாபார நோக்குடைய நிறுவனங்களும் இவ்வாறான பரீட்சைக்குத் தயார்படுத்தும் வகுப்புகளை வழங்குகின்றனர்.

## பயின்றுபார்க்கும் காலம்

கிம்நாசியத்தில் சேர்ந்த பின்பு பல மாநிலங்களில் மாணவ மாணவிகளுக்கு பயின்றுபார்க்கும் காலம் உள்ளது (1தொடக்கம் 3 மாதங்கள் அல்லது ஒரு தவணை) அத்துடன் சிலவேளைகளில் பாடசாலை வருட முடிவில் ஒரு பரீட்சையில் தேறவேண்டும், இதன்மூலம் 3-4 வருடங்களின் பின்பு அவர்கள் பல்கலைக்கழக புகுமுகப் பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவார்கள்.